சிறந்த பாரம்பரிய சுற்றுலாத் தளமாக கீழடி தேர்வு! ஒன்றிய அரசு அறிவிப்பு!

# உலகெங்கும் வாழும் தமிழர்களே கீழடிக்கு வருக; நம் வரலாற்றைப் பருக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.30 - ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறை சார்பில் சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், "உலகெங்கும் வாழும் தமிழர்களே, கீழடிக்கு வருக, நம் வரலாற்றைப் பருக!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் அறிவியல் காலக்கணிப்பு கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததையும், கங்கைச் சமவெளியின் நகரமயமாக்கலுக்கு சமகாலமானது என்பதையும் உறுதிபடுத்தியுள்ளது. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் நிலைநிறுத்தியுள்ளது.

தமிழர்களின் தொன்மை, பண்பாடு, நாகரிகம், கல்வியறிவு, எழுத்தறிவு, உலகின் பல்வேறு பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு ஆகியவற்றினை பறைசாற்றும் விதத்திலும், அதனை உலகிற்கு வெளிக்கொணரும் வகையிலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கீழடி அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.3.2023 அன்று திறந்து வைத்தார்.

இந்த அருங்காட்சியகத்தில், மதுரையும் கீழடியும், வேளாண்மையும் நீர் மேலாண்மையும், கலம் செய்கோ, ஆடையும் அணிகலன்களும், கடல்வழி வணிகம், வாழ்வியல் எனும் ஆறு பொருண்மைகள் அடிப்படையில் தனித்தனி கட்டடங்களில் தொல் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பழந்தமிழ் சமூகத்தின் முற்போக்கு சிந்தனைகள் பொருந்திய சுமார் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொல் பொருட்கள் கீழடி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அருங்காட்சியகத்தை உள்ளம் குளிர கண்டு களிக்கின்றனர்.

தற்போது, ஒன்றிய அரசின் சுற்றுலாத்துறை சார்பில், சுற்றுலா தினத்தில் வழங்கப்படும் 'சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக' கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது தமிழர்கள் அனைவருக்கும் பெருமைக்குரிய செய்தியாகும்.

ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறையால் 'சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக' கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "உலகெங்கும் வாழும் தமிழர்களே... கீழடிக்கு வருக... நம் வரலாற்றைப் பருக...!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிண்டி தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில்

# ரூ.8 கோடியில் எம்.ஆர்.ஐ. கருவி! 43 ஒப்பந்தப் பணியாளர்களுக்குப் பணி நியமன ஆணை!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

*சென்னை, செப். 30 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.09.2024) சென்னை, கிண்டி, தேசிய முதியோர் நல மருத்துவமனை கூட்டரங்கில் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 43 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.*

*பின்னர் இம்மருத்துவமனையில் ரூ.21.70 இலட்சம் மதிப்பிலான அவசர ஊர்தி சேவையினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை சந்தித்து நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

**தேசிய முதியோர் நல மருத்துவ மையம்!**

*இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி சென்னை கிண்டியில் அமைந்துள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டது. தேசிய முதியோர் நல மருத்துவமனை இந்திய அளவில் இரு இடங்களில் அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டு டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் ஒரு வளாகத்தில் தேசிய முதியோர் நல மருத்துவமனை சிறிய அளவில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இந்தியாவில் பிரத்யேகமான முதியோருக்கான நல மருத்துவமனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் 8.64 ஏக்கர் பரப்பளவில் 3,76,358 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட இம்மருத்துவமனை தொடங்கப்பட்டது. இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை இந்திய அளவில் செயல்படுகின்ற ஒரே முதியோர் நல மருத்துவமனை ஆகும்.*

*இம்மருத்துமவனையில் 200 படுக்கை வசதிகள் இருக்கின்றது. 40 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர் களின் வழிகாட்டுதலின்படி, கட்டணப் படுக்கை வசதிகள் அனைத்து மருத்துவமனைகளிலும் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை சென்னை, மதுரை, கோவை, சேலம், தஞ்சை போன்ற பல்வேறு மாவட்டங்களில் கட்டணப் படுக்கை அறைகளை தொடர்ந்து தொடங்கி வைத்து வருகிறோம்.*

*இந்த தேசிய முதியோர் நல மருத்துவமனையிலும் 20 கட்டணப் படுக்கை அறைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதில் மிக மிக குறைந்த கட்டணமாக நாளொன்றுக்கு ரூ.900/- என்கின்ற வகையில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் மருத்துவமனை என்பதால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.900/- கட்டணத்தில் உணவு வசதிகளும் இதில் அடங்கும். மேலும் இம்மருத்துவமனையில் 24 மணிநேரமும் உள்நோயாளிகள் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு பயன்பாட்டில் இருந்து வருகிறது. முதியோருக்கென அறுவை சிகிச்சை பிரிவு தொடங்கியிருக்கிறது. இருதய மருத்துவப் பிரிவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது.*

*சிறுநீரக மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பிரிவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இரைப்பை மற்றும் குடல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், முடநீக்கியல் பிரிவு, முதியோர் மனநல மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை பிரிவு, பல் மருத்துவம், இயன்முறை மருத்துவம், ஆயுஷ் போன்ற பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் இங்கு வருகின்ற முதியோர்களுக்கு வயது முதிர்வின் காரணமாக சிகிச்சை பெற வருபவர்கள், மாலை நேரங்களில் குறிப்பாக ஓய்வு நேரங்களில் புத்தகங்கள் படிப்பதற்குரிய வசதியாக நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.*

*அதோடுமட்டுமல்லாமல் பழங்காலத்து விளையாட்டு என்கின்ற வகையில் பல்லாங்குழி போன்ற விளையாட்டு உபகரணங்களும், கேரம் போர்டு, செஸ் போன்ற விளையாட்டு சாதனங்களும் இம்மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் கடந்து கடந்த 2 மாதங்களுக்கு முன்னாள் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவு ஒன்று ஜீன் திங்கள் 11ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இம்மருத்துவமனயில் முதியோருக்கான பிரத்யேக சேவையில் மிகச் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.*

**ரூ.8 கோடி மதிப்பிலான எம்.ஆர்.ஐ. பரிசோதனை கருவி!**

*இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் பொறுத்தவரை 60 பணியிடங்கள் நிரந்தரம் (Regular) என்கின்ற வகையிலும், 216 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நியமிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அந்தவகையில் 276 பணியிடங்களை முழுவதுமாக நிரப்புவதற்குரிய பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தவகையில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் தேந்தெடுக்கப்பட்ட செவிலியர்கள் இம்மருத்துவமனையில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்று 43 ஒப்பந்த பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் தரப்பட்டிருக்கிறது. Clinical Physiotherapist, Lab technician, Pharmacist, Date Entry Operator, Steno மற்றும் Typist, Occupational Theraphy, Lab attend, OT technician, ECG Technician போன்ற பல்வேறு தொழில்நுட்ப பணியாளர்கள் என 43 பேருக்கு ஒப்பந்த பணிநியமனங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.*

*மேலும் இம்மருத்துவமனையில் இருந்து அவசர தேவைகளுக்கு மாற்று மருத்துவமனைகளுக்கு முதியோர்களை அழைத்து செல்வதற்கு வசதியாக ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் அவசர ஊர்தி சேவை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை தொடங்கி கடந்த 8 மாதங்களில் மட்டும் சென்னை மட்டுமல்லாமல் விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் போன்ற பல்வேறு மாவட்டங் களிலிருந்தும் இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். புற நோயாளிகளைப் பொறுத்தவரை 1,11,918 பேர் மருத்துவச் சேவையினைப் பெற்றிருக்கிறார்கள்.*

*உள்நோயாளிகளைப் பொறுத்தவரை 3,267 பேர், அறுவை சிகிச்சைகளைப் பொறுத்தவரை 579 பேருக்கும், டையாலிஸிஸ் பொறுத்த வரை 16, ஹீமோ டயாலிஸிஸ் பொறுத்தவரை 57, ஆயுஷ் சேவைகள் 2,000 சிடி ஸ்கேன் 2900, எக்ஸ்ரே 5095, அல்ட்ரா சவுண்ட் 5616, இருதய மருத்துவப் பிரிவுகள் 8132, இரத்தப் பரிசோதனைகள் 1,62,361, முட நீக்கியல் 6308 என ஒரு மகத்தான மருத்துவ சேவையினை கடந்த 8 மாதத்திற்குள் இம்மருத்துவமனை நிர்வாகம் மருத்துவ சேவை வழங்கியிருக்கிறது. மேலும் இம்மருத்துவமனையில் மருந்துகள் கையிப்பு பொறுத்தவரை ரூ.1 கோடி மதிப்பிலான Essential Drugs இம்மருத்துவமனையில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.*

*மேலும் இம்மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததுபோல் ரூ.8 கோடி மதிப்பிலான MRI பரிசோதனை கருவி மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. தேரணிராஜன், தேசிய முதியோர் நல மருத்துவமனை இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், மாமன்ற உறுப்பினர் திரு.மோகன்குமார், மருத்துவப் பேராசிரியர்கள், உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! ஒன்றிய அரசின் கடன் இப்போது மேலும் 25 சதவிகிதம் அதிகரித்து, 176 லட்சம் கோடி ரூபாய் கடனாளி அரசு என்ற 'நல்ல பெயர் (!)' எடுத்திருக்கிறார்களாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; ஒன்றிய பா.ஜ.க. அரசினர் இந்திய மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை முறையாகக் காப்பாற்றி, கடமைகளை முழுமையாக நிறைவேற்றுகிறார்களோ இல்லையோ, கடன் வாங்குவதை மட்டும் முழு மூச்சுடன் செய்கிறார்கள் !**

**ஒன்றிய அரசின் வருவாயில் 19 சதவிகிதத் தொகையை, ஏற்கனவே குவிந்திருக்கும் கடன்களுக்கான வட்டியைக் கொடுப்பதற்கே செலவிடுகிறார்கள் !**

**கடன் மேல் கடன் வாங்கி, ஏற்கனவே ஏற்பட்ட கடனுக்கு வட்டியைக் கட்டுவதற்கும் கடன் வாங்குவது, தாழ்ந்த பொருளாதார உத்தி ஆகும்.**

**இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், "சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சோனாசலத்திடம் கடன் வாங்குதல்" என்று அரை நூற்றாண்டுக்கு முன்பே கடுமையாக இடித்துரைத்தார் !**

திருவண்ணாமலை மாவட்டத்தில்

# புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல் பணியில் விரைந்து ஈடுபடுவீர்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



*திருவண்ணாமலை, செப். 30 - புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் நீக்கல் பணியில் விரைந்து ஈடுபடுவீர் என திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட நிர்வாகிகளுக்கு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.*

இது குறித்து அவர்விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

01.01.2025 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாடு மாநில தலைமைத் தேர்தல் அலுவலர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு அன்று நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

மேற் குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம்மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18வயது நிரம்பகூடிய புதிய வாக்காளர்களும், தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்த அந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

- புதிய வாக்காளர்கள் சேர்த்திட படிவம் 6
- வாக்காளர்களை நீக்கிட படிவம் 7
- வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்திட படிவம் 8

புதிய வாக்காளர்களாக விண்ணப்பிப்பவர்கள் தங்களின் புகைப்படம், வயதுக்கான சான்று, ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் இணைத்திட வேண்டும்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

2. பெயர்களை சேர்க்க/ நீக்க/ திருத்தம் செய்வதற்கு விண்ணப்பம் கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதியதாக குடிபெயர்ந் துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போது உள்ள பட்டியலிலிருந்து நீக்கிடவும்,

திருவண்ணாமலை தெற்கு வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட நிர்வாகிகள், பணிக்குழு நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஊர் கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, வாக்காளர் பட்டியலை சரிபார்த்தலை விரைந்து மேற்கொள்ள கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.




மயிலாடுதுறை மாவட்டம் மாணவர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு நேர்காணல் மாவட்ட அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. நேர்காணலை மாநில மாணவர் அணி துணை செயலாளர் தமிழ் கா.அமுதரசன் மாணவர் அணிக்கு விண்ணப்பித்திருந்த மாணவர் அணியினரிடம் நேர்காணல் நடத்தினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், ஞான. இமையநாதன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என்.செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் தளபதி முக.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி, கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் பேரில், மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தலின்படி அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் தேர்வு குறித்த நேர்முக ஆய்வுக் கூட்டங்கள் ஒன்றிய அவைத்தலைவர்கள் தலைமையில் கழக சட்டத்திட்ட திருத்துகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் ஆய்வு மற்றும் நேர்காணல் நடத்தினார். இதில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் மு. கணேசன், லதா பாலு, சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட அமைப்பாளர்கள் என்.ஆர்.ராமதுரை, க.தர்மதுரை, பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், கருப்புசாமி, ஜெயகுமார், ரவிகுமார், அருண்ராஜா, முருகானந்தம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.